MCOP. No. 60 /2022

Dated : 17.08.2023

Time: 11.55 a.m to 12.00 p.m

P.W- 1 சாட்சி மீனாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

நான் பேருந்திலிருந்து இறங்கிய பிறகு சுமார் 10 அடி தள்ளி என் மகன் இறங்கும் போது தான் விபத்து ஏற்பட்டது. மேற்படி பேருந்து ஓட்டுநரால் விபத்து ஏற்படவில்லை என்றும் வாகனம் ஓடிக்கொண்டு இருந்தபோதே என் மகன் இறங்க முயற்சித்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விபத்து என் மகன் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றும் பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றால் அது தவறு. விவசாய நிலம் மூலமும் பால் தொழில் மூலமும் மாதம் ரு.20000/- சம்பாதித்தார் என்பதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடுகள் தவறானது, அதிகமானது என்றால் சரியல்ல. விபத்து என் மகன் கவனக்குறைவால் மட்டுமே நடந்ததால் எதிர்மனுதாரருக்கு எதிராக இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-K.Ananthan**
**Subordinate Judge,**
**Attur.**